அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2015

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# மேற் பிரிவு

(10 – 11 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணி 30 நிமிடம்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) பின்வரும் சொற்களைப் பிரித்து எடுதுக.** புள்ளிகள்: 5

1. நீலவானம் ______________ + ______________
2. இலாபநட்டம் ______________ + ______________
3. வருமானவரி ______________ + ______________
4. தமிழிசை ______________ + ______________
5. வயிற்றுவலி ______________ + ______________

**(ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எடுதுக.** புள்ளிகள்: 5

1. ஞாயிறு + கிழமை = ______________________
2. சினம் + கொண்டான்= ______________________
3. மரம் + வேர் = ______________________
4. கண் + இமை = ______________________
5. வலம் + கை = ______________________

**(இ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ப் பொருள் கொண்ட சொற்களை எழுதுக.** புள்ளிகள்: 5

1) ஒற்றுமை ______________________
2) சிறுபான்மை ______________________
3) மூப்பு ______________________
4) நீதி ______________________
5) வளர்பிறை ______________________

**(ஈ) பின்வரும் சொற்களின் உயர்திணைப் பெண்பாற் சொற்களை எழுதுக.**

புள்ளிகள்: 5

1) நல்லவன் ______________________
2) மாமா ______________________
3) பாடகன் ______________________

4) சுந்தரன் ________________________________

5) தலைவன் ________________________________

**(உ) அடைப்புக் குறிக்குள் இருந்து பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கீழே தரப்பட்ட வசனங்களிற் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.**

| புள்ளிகள் | |
|---|---|

புள்ளிகள்: 10

1) மயில் ஓர் ________________ மிக்க பறவை. (அலகு, அழகு)

2) சாதனை படைப்பதற்காகச் சிலர் இமய ________________ மீது ஏறுவதாக அறிந்தோம். (மலை, மழை)

3) இடிமுழக்கத்தின் ________________ குழந்தைகளுக்கு அச்சத்தைத் தரும். (ஒலி, ஒளி)

4) சந்திரனது ________________ வடிவம் பார்க்கும்பொழுது வியப்பைத் தரும். (பிரை, பிறை)

5) என் அப்பா புல்லுக்குள் வளர்ந்திருக்கும் ________________ பிடுங்கி எறிந்தார். (கழைகளை, களைகளை)

6) தமிழர்கள் திருமணத்தில் ________________ கட்டும் நிகழ்வு பிரதானமானது. (தாலி, தாழி)

7) ________________ காட்டில் வாழும் கொடிய விலங்குகளில் ஒன்று ஆகும். (புளி, புலி)

8) அவனது ஒரு ________________ பார்வையை இழந்து விட்டது. (விழி, விளி)

9) மரத்தில் இருந்து நான் விழுந்ததும் காலில் ________________ எடுத்தது. (வளி, வலி)

10) ஒருவர் மற்றவர் மீது ____________ சுமத்துதல் என்பது நல்ல பழக்கம் இல்லை. (குரை, குறை)

| புள்ளிகள் | |
|---|---|

**(ஊ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு அவற்றின் பொருள் விளங்கும்படி வாக்கியங்கள் எழுதுக.** புள்ளிகள்: 20

1. அமைச்சர்:______________________________

______________________________

2. நூலகம்:______________________________

______________________________

3. வெள்ளம்:______________________________

______________________________

4. பேச்சுப் போட்டி:______________________________

______________________________

5. பிறந்த நாள்:______________________________

______________________________

6. தோட்டம்:______________________________

______________________________

7. கடற்கரை:______________________________

______________________________

8. சமையல்:______________________________

______________________________

9. தொழில்நுட்பம்:______________________________

______________________________

10. காட்டுத் தீ:______________________________

______________________________



| புள்ளிகள் | |
|---|---|

**(எ) கோடிட்ட இடங்களிலே பொருத்தமான சொற்களைப் பாவித்துக் கீழே தரப்பட்ட வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:**

புள்ளிகள்: 20

1. நமது உடலிலுள்ள பகுதிகளிலே தலை ஒரு முக்கியமான ____________________ ஆகும்.
2. உயிர் வாழ்வதற்குச் சத்தான உணவோடு போதிய _________________ அருந்தவேண்டும்.
3. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் ____________________ ஆகிவிடும் என்பது முதுமொழி.
4. நல்ல நூல்களைப் படித்து _____________________ வளர்க்க வேண்டும்.
5. பசியால் வாடுபவர்களுக்கு ______________________ அளிப்பது தருமச் செயல்.
6. சேர, சோழ, பாண்டியர்களை ______________________ என அழைப்பர்.
7. பூக்களைத் ______________________ பூ மாலை கட்டுவர்.
8. தேனீக்கள் பூக்களிலிருந்து ________________________ எடுக்கின்றன.
9. தாவரங்களைத் தின்று வாழும் யானை ______________________ உள்ள ஒரு மிருகம்.
10. பட்டதாரிகள் சங்கம் நடாத்தும் தமிழ்ப் போட்டிகள் தமிழைப் படிக்க எங்களுக்கு ________________________ தருகிறது.

| புள்ளிகள் | |
|---|---|

**(ஏ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களாற் பந்தியில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.**

புள்ளிகள்: 10

அறிவுக்கு உரமூட்டுவது கல்வி. அவ்வாறே உடலுக்கு உரமூட்டுவது ______________________. பயன்படுத்தாத கத்தி துருப்பிடித்துப் பயனற்றுப் போய்விடும். அது போல உடற்பயிற்சி இல்லாத உடல் பல ______________________ ஆளாகி அழிகிறது. எனவேதான் உடற்பயிற்சி பாடசாலைகளில் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது.

உடற்பயிற்சியால் தசை வலிமை ______________________ பசியேற்பட்டு உண்ணும் உணவு ______________________ செமிக்கிறது. குருதி ஓட்டம் அதிகரிக்கிறது. மூச்சுப் பைகள் நன்கு விரிந்து சுருங்கி இயங்குகின்றன. வியர்வை நன்கு ______________________. வியர்வை மூலம் கழிவுப் பொருள்கள் அகற்றப்படுகின்றன. எனவே, உடற்பயிற்சியால் உடலின் ______________________ உறுப்புகளும் உறுதியாக்கப்பட்டுச் சிறப்பாக ______________________.

மெதுவாக ஓடுதல், மிதிவண்டி ஓட்டுதல், ______________________ போன்றவை நல்ல உடற்பயிற்சிகள் ஆகும். உடற்பயிற்சிகளை நல்ல காற்றோட்டம் ______________________ இடங்களிலே செய்வது அதிக நன்மை பயக்கும். ______________________ அங்கே உடலுக்குத் தேவையான பிராணவாயுவும் கிடைக்கிறது. உடற்பயிற்சி செய்ய உகந்த நேரம் அதிகாலையும் மாலைநேரமும் ஆகும்.

| | | |
|---|---|---|
| 1. இயங்குகின்றன | 2. நீச்சல் | 3. அடைவதுடன் |
| 4. எளிதாகச் | 5. உடற்பயிற்சி | 6. நோய்களுக்கு |
| 7. வெளியாகிறது | 8. பல | 9. உள்ள |
| 10. அத்துடன் | | |

| புள்ளிகள் | |
|---|---|

**(ஐ) கீழே தரப்பட்ட கவிதைகளைப் படித்த பின்னர் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைத் தருக.** புள்ளிகள்: 20

சின்னஞ் சிறு கிளியே – கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலி தீர்த்தே – உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்!

பிள்ளைக் கனியமுதே – கண்ணம்மா!
பேசும் பொற்சித்திரமே!
அள்ளி யணைத்திடவே – என்முன்னே
ஆடி வருந் தேனே!

ஓடி வருகையிலே – கண்ணம்மா!
உள்ளங் குளிரு தடீ!
ஆடித் திரிதல்கண்டால் - உன்னைப்போய்
ஆவி தழுவு தடீ!

உன்கண்ணில் நீர்வழிந்தால் - என்நெஞ்சில்
உதிரம் கொட்டு தடீ!
என்கண்ணிற் பாவையன்றோ? – கண்ணம்மா
என்னுயிர் நின்ன தன்றோ?

**<u>கேள்விகள்:</u>**

1) கண்ணம்மாவைப் பாரதியார் வேறு எவ்வாறு அழைக்கின்றார்?

(அ) ------------------------------------------------------------------------------------------------

(ஆ) ------------------------------------------------------------------------------------------------

2) கண்ணம்மா எதற்காக இங்கு வந்தாள் என்று கவிஞர் கூறுகின்றார்?

------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------

3) கண்ணம்மா ஓடும்போதும் ஆடும்போதும் கவிஞருக்கு ஏற்படும் உணர்வுகள் எவை?

(அ) ------------------------------------------------------------------------------------------------

(ஆ) -----------------------------------------------------------------------------------------------------

4) எதனாலே தனது நெஞ்சில் இரத்தம் கொட்டுகிறது என்று பாரதியார் பாடினார்?

-----------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------

5) கண்ணம்மா பற்றிய உங்கள் கருத்து என்ன?

-----------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------

| புள்ளிகள் | |
|---|---|